**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

STC No. : 171/2021

Name : Selvadeepa

P.W. : 5

Father Name :

Village :

Taluk : Madathukulam

Occupation :

Age : /2025

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 12.11.2025

**எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**சாட்சி Micro soft teams செயலி மூலம் ஆஜரான பின்பு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு முதல் விசாரணை**

நான் தற்போது மோட்டார் வாகன ஆய்வாளர் நிலை 1 திருப்பூர் தெற்கில் வேலை செய்கிறேன். கடந்த 20.09.2019 அன்று மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண். 197/2019 இதச பிரிவுகள் 279, 337ன் படி பதிவு செய்யப்பட்ட வழக்கு சம்மந்தப்பட்ட விபத்து வாகனமான TN 40 W 0009 என்ற இலகு ரக பயணிகள் வாகனத்தை அலுவலக வளாகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். ஆய்வில் வாகனத்தின் ஆவணங்கள் சரியாக இருந்தது. வாகனத்தில் கீழ்க்கண்ட சேதாரங்கள் காணப்பட்டது.

1. முன் பக்க இடது புற பம்பர் பெயிண்ட் சேதாரம் அடைந்திருந்தது

2. தடை திறன் மற்றும் ஸ்டியரிங் சரியாக இருந்தது. இவ்வாகன விபத்து எவ்வித இயந்திர கோளாரினால் ஏற்படவில்லை என்று சான்றளிக்கப்பட்டது. **வாகனத்தின் மோட்டார்**

**வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** மேலும் அதே விபத்தில் சம்மந்தப்பட்ட TN 94 A 3364 என்ற இருசக்கர வாகனத்தை 24.09.2019 அன்று அலுவலக வாளகத்தில் வைத்து ஆய்வு செய்தேன். ஆய்வில் வாகனத்தின் பதிவுச் சான்று மற்றும் காப்புச் சான்று சரியாக இருந்தது. வாகனத்தில் கீழ்க்கண்ட சேதாரங்கள் காணப்பட்டது.

1. இடது பக்க பின்புறம் பார்க்கும் கண்ணாடி உடைந்திருந்தது

2. பின் பக்க சக்கரம் மட்கார்டு வளைந்த நிலையில் இருந்தது

3. பின் பக்க வலது புற இண்டிகேட்டர் உடைந்த நிலையில் இருந்தது

4. முன் பக்க இடது புற புட் ரெஸ்ட் வளைந்த நிலையில் இருந்தது

5. பின் பக்க நெம்பர் பிளேட் வளைந்த நிலையில் இருந்தது

இவ்வாகன விபத்து எவ்வித இயந்திர கோளாரினால் ஏற்படவில்லை என்று சான்றளிக்கப்பட்டது. **வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) இரண்டு சக்கர வாகனத்திற்கு ஏற்பட்ட சேதாரங்கள் கிழக்கிலிருந்து மேற்காக செல்லும் போது வலது பக்கம் திரும்ப முய்ற்சிக்கும் போது பின்னால் வந்த வாகனத்தின் இடது முன் பம்பர் மோதி இருசக்கர வாகனம் இடது புறமாக விழுந்தால் இரண்டு வண்டிகளுக்கும் இந்த சேதாரங்கள் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான்.

மறு விசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2025.11.12 19:26:22 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்